# வருடாந்த அறிக்கை

# 2015

## அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு: யாழ் அலுவலகம்

## (SOND: Jaffna Branch)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின வலையமைப்பு நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1. மிதிவெடி அபாயக்கல்வித்திட்டம். (Mine Risk Education project)
2. இயற்கை விவசாயப்பண்ணை அபிவிருத்தித் திட்டம். (Nature Farm Development project)
3. கூட்டுறவு தொடர்பான ஆய்வு (Research on Co-operative Sector Development)
4. தகவல் வளநிலையம் (Information Centre)
5. விசேட செயற்பாடுகள் (Special Activities)
6. சமூக அமைப்புக்களின் வலுவூட்டல் ஒருங்கிணைப்பு.(CBO Capacity Building & Coordination)

## மிதிவெடி அபாயக்கல்வித் திட்டம் (Mine Risk Education Project)

மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்களின் பாதிப்புக்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு மிதிவெடி அபாயக் கல்வித்திட்டம் 2009 ஆம் ஆண்டில் இருந்து யுனிசெவ் நிறுவனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்செயற்றிட்டமானது பிரதானமாக மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிநிலையிலுள்ள வெடிபொருட்களிள் அபாயம் உள்ளதென அடையாளம் காணப்பட்ட யாழ் மாவட்டத்தின் பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது, இது கோப்பாய், தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுகளை முதன்மையாகவும், சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை அடுத்தகட்ட நிலையிலும் கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது, அத்துடன் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளும் ஒரு குறித்த கால இடைவேளைகளில் இச்செயற்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டது. பிரதானமாக மீள்குடியேற்றம் நடைபெற்ற, நடைபெறுகின்ற கிராமங்களிலும், மிதிவெடி அபாயம் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்கள், மற்றும் மிதிவெடி அகற்றல் செயற்பாடு நடைபெறும் இடங்களை சுற்றி வாழ்கின்ற, பல்வேறு தேவைகளுக்காக அப்பிரதேசங்களை பயன்படுத்துபவர்களையும், விசேடமாக பாடசாலை மாணவர்களையும் இலக்காகக்கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

**இச்செயற்றிட்டமானது பின்வரும் பிரதான செயற்பாடுகளை தன்னகத்தே கொன்டுள்ளது**

- சமூகத்தை மையப்படுத்திய மிதிவெடி அபாயக்கல்வி
- பாடசாலைகளை மையப்படுத்திய மிதிவெடி அபாயக்கல்வி
- சமூக இணைப்பு செயற்பாடுகள்
- சமூகமட்ட கட்டமைப்புக்களை உருவாக்கலும், வலுப்படுத்தலும்
- பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித்திட்டம்.
- மிதிவெடி மற்றும் வெடிநிலையிலுள்ள வெடிபொருட்களை அடையாளப்படுத்தலும், அவற்றினை அகற்றுவதில் உதவிசெய்தலும்.

**இச்செயற்றிட்டத்தின் பிரதான விளைவுகள்**

- ❖ சமூகத்தை மையப்படுத்திய மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்தினூடாக 8000 வரையான இளைஞர்கள், யுவதிகள், மீள்குடியேறிய மக்களுக்கு மிதிவெடி அபாயக்கல்வி வழங்கப்பட்டது.
- ❖ 500 பாடசாலை மாணவர்களுக்கு மிதிவெடி அபாயக்கல்வி வழங்கப்பட்டது.
- ❖ 1500 வரையான மக்களுக்கு சமூக இணைப்பு செயற்பாடு ஊடாக மிதிவெடி அபாயக்கல்வி வழங்கப்பட்டது.
- ❖ 30 கிராமமட்ட தொண்டர்களுக்கு மிதிவெடி செயற்பாடு தொடர்பாக வலுவூட்டப்பட்டது.
- ❖ 8 கிராமமட்ட மிதிவெடி செயற்பாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு வலுவூட்டப்பட்டது.
- ❖ 200 வரையான அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டது.
- ❖ 240 மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிநிலையிலிலுள்ள வெடிபொருட்கள் மக்களின் பங்களிப்புடன் அடையாளப்படுத்தப்பட்டு யுனிசெவ், பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் அனுசரனையுடன் மிதிவெடி அகற்றல் நிறுவனத்தினரால் அகற்றப்பட்டது.
- ❖ மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்ட 5 பயனாளிகளுக்கு ரூபா 30,000 வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டது.
- ❖ இக்காலப் பகுதியில் மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்ட 6 பேருக்கு உடனடி மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
- ❖ 8 சிறுவர் கழகங்களுக்கும், 10 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

## இயற்கை விவசாய பண்ணை (Nature Farm Development project)

இயற்கை விவசாயபண்ணையானது பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பல்லப்பை என்னும் இடத்தில் அமைந்துள்ளது. 12 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுகின்றது. இப் பண்ணையில் 20 விவசாயிகளுக்கு 20 பரப்பு நெற்செய்கைக்காணியும் 20 பரப்பு மேட்டுப்பயிர்ச்செய்கைக் காணியும் வழங்கப்பட்டு அவர்களும் இயற்கை முறையிலே விவசாயம் செய்வதற்கு பயிற்றுவிக்கப்பட்டு சான்றிதல்களும் வழங்கப்பட்டன. மீதி நிலப்பரப்பில் எமது நிறுவனம் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளது.

இப்பண்ணை இரசாயனங்கள் அற்ற இயற்கை முறையில் பயிர்ச்செய்கை செய்யப்படுவதுடன் பல்வேறு வகையான பயிரினங்களும் தாவர இனங்களும் பயிரிடப்பட்டுள்ளன. இங்கு நீர் இறைப்பதற்கு சூரிய சக்தி மின்கலங்கள் பயன்படுத்தப்படுகின்றது. பண்ணையில் உள்ள கழிவுகள் யாவும் இயற்கை உரப் பசளையை தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. புதிய முறைப்பயிர்ச் செய்கை, தூவல் நீர்ப்பாசன முறை, சொட்டு நீர்ப்பாசன முறை என்பனவும் இப்பண்ணையில் செயற்படுத்தப்படுகின்றன.

**இயற்கையான நஞ்சற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து சமூகத்திற்கு வழங்குவதும் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சியினை அளிப்பதும் சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இப்பண்ணையின் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.**

இப்பண்ணையில் பல்வேறு வகையான பயிரினங்களும் மரக்கறிப் பயிர்களும், பழமரங்களும் மூலிகைத் தாவரங்களும் பயிரிடப்பட்டுள்ளன.

நாற்று மேடைகள் அமைத்து விதை நாற்றுக்கள் மூலம் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை உருவாக்கி இலவசமாக சமூகத்துக்கு வழங்கி வருகின்றது.

இதன் மூலம் பாடசாலைகள், பொது அமைப்புக்கள், சனசமூகநிலையங்கள் போன்றவற்றிற்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டிருப்பதோடு மேலும் அதிகளவு மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிட்டுள்ளோம்.

## கூட்டுறவு தொடர்பான ஆய்வு (Research on Co-operative Sector Development)

கூட்டுறவு தொடர்பான ஆய்வானது வடமாகாண கூட்டுறவு அமைச்சு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு ஊடாக இதனை செயற்படுத்தியது. இதற்கமைய எமது நிறுவனமும் சாந்தீகம், YMCA ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டது. 2014 ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத்துறை ஆய்வானது இவ்வருடத்தின் ஆரம்பத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று கூட்டுறவுத்துறை ஆய்வு சம்பந்தமான பூரண அறிக்கை அமைச்சிற்கு வழங்கப்பட்டது.

இவ்ஆய்வின் பொழுது கூட்டுறவுத்துறையின் குறைபாடுகள், பிரச்சினைகள், தேவைகள் என்பன இனங்காணப்படவும், புதிய கூட்டுறவு முயற்சிகள் என்னென்ன உருவாக்கப்படலாம் எனவும், கூட்டுறவுச்சட்டங்கள், நடைமுறைகள், பிரமாணங்களில் என்பவற்றில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையும் இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாக கொண்டு செயற்பட்டது.

இவ்ஆய்வு தொடர்பாக வடமாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் , முதலமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலாளர், கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கூட்டுறவு சபையினர், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் போன்றவர்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

## தகவல் வளநிலையம் (Information Centre)

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரித்து அறிவை மேம்படுத்தும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது பணியாளர்கள் ஆகியோர் எமது நூலகத்தில் நூல்களை பெற்று வாசிப்பதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர். மேலும் அலுவலகத்திலுள்ள வளநிலையத்தின் நடமாடும் நூலக சேவைக்கேற்ப யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் மகா வித்தியாலயம், யா/இளையதம்பி இந்து மகாவித்தியாலயம், யா/செங்குந்தா இந்துகல்லூரி, யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம், யா/நல்லூர் இந்துதமிழ் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிற்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நடமாடும் நூலகம் செய்யப்படும் பாடசாலைகளான யா/நல்லூர் இந்துதமிழ் மகளிர் கல்லூரி, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, யா/இளையதம்பி பாடசாலை போன்றவற்றிற்கு TINY LIFCO Dictionary மற்றும் திருக்குறள் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

## விசேட செயற்பாடுகள் (Special Activities)

### சமூக விழிப்புணர்வு தொடர்பான பதாதைகள் காட்சிப்படுத்தல்

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது அமைப்பினால் எம்மிடம் உள்ள எமது செயற்திட்டத்துடன் தொடர்பான பதாதைகள், சமூக விழிப்புணர்வு சார்ந்த பதாதைகள் மற்றும் சமயம் சார்ந்த நன்நெறியினை வெளிப்படுத்தும் பதாதைகள் ஆகியவற்றை நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள பெருந் தெருக்களில் காட்சிப்படுத்தியுள்ளோம். இச்செயற்பாட்டிற்கு வர்த்தக சங்கத்தின் உதவியுடன் வணிக நிறுவனங்கள் பதாதைகளை வடிவமைப்பதில் நிதிப்பங்களிப்பு செய்துள்ளனர்.இதேபோன்ற பதாதைகளை வல்லிபுரம் ஆழ்வாய்கோவில் திருவிழாக் காலங்களில் ஆலய சூழலில் காட்சிப்படுத்தியுள்ளோம்.

அத்துடன் பாதீனியம் காணப்படுகின்ற இடங்களில் பாதீனியம் தொடர்பான பதாதைகளை காட்சிப்படுத்தியுள்ளோம். மற்றும் சேதனவிவசாயம் தொடர்பான விழிப்புணர்வு பதாதைகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### பழமரக்கன்றுகள் வழங்கல்

பழமரக்கன்றுகள் வழங்கும் செயற்திட்டத்தின் மூலம் பாடசாலைகள், பொதுஅமைப்புக்கள், பொதுமண்டபங்கள், சனசமூகநிலையங்கள் ஆகியனவற்றிற்கு பல்வேறு வகையான ஆயிரக்கணக்கான பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்பு கொண்டுள்ளவர்களுக்கு உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இச்செயற்பாடானது தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை விநியோகிக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### முன்பள்ளிக்கான விளையாட்டு உபகரணம் வழங்கல்

முல்லைத்தீவு பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி தற்போது ஓய்வுபெற்ற அ.சிவஞானசுந்தரம் என்பவரிடமிருந்து கொக்குவில் பகுதியில் இயங்கிவரும் காந்திஜி முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

காந்திஜி முன்பள்ளி பாடசாலையின் ஆசிரியருக்கான பயிற்சிவகுப்பு ஒன்று யா/இந்துமகளிர் பாடசாலை அதிபரின் அனுமதியுடன் எமது பணியாளரினால் ஒழுங்கமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

### சிறுதொழில் முயற்சிகள்

எமது நிறுவனமானது தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்கில் யாழ்சக்தி கம்பனியை நடாத்தி வருகின்றது. இதன் முக்கிய உற்பத்தி பொருளாக தட்டை வடை உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பனியானது நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கம்பனியின் மூலமாக 9 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனியானது இலாபகரமாக செயற்பட்டு வருகின்றது.

## சமூக அமைப்புக்களின் வலுவூட்டல் ஒருங்கிணைப்பு.(CBO Capacity Building & Coordination)

எமது அமைப்பில் நூற்றுக்கு மேற்பட்ட சமூக அமைப்புகள் அங்கம் வகிக்கின்றது. இவர்களுக்கான பயிற்சி, வழிகாட்டல் , ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலகம் விரைவில் உருவாக்கப்பட உள்ளது.